From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 51/19

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : சேகர் | Father/Husband Name | : சேதுராமன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 29.04.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 29 day of 04.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் ஒத்தக்கடையில் குடியிருந்து வருகிறேன், டெய்லரிங் தொழில் செய்து வருகிறேன். அசா1 கண்ணப்பன் எனது மாமனார் ஆவார், ரமா எனது மனைவி ஆவார். ராதிகா எனது மனைவியின் சகோதரி ஆவார். ஆஜர் எதிரி வளநாடு என்பவரை தெரியும். 08.05.2015 ம் தேதி அசா1 எனது மாமனார் அவரது கொழுந்திய ராதிகா என்பவருக்கு கட்டி கொடுத்த வீட்டிற்கு வாடகை வாங்குவதற்காக வந்திருந்தார். அப்போது காலை சுமார் 09.00 மணி இருக்கும். எனது மாமனாருடன் நானும் உடன் சென்றிருந்தேன். மாமனாரின் வீட்டில் குடியிருந்தவர்களிடம் வாடகை கேட்க சென்றிருந்தபோது எதிரி வளநாடு கண்ணப்பனை பார்த்து நீ எதற்காக வாடகை வாங்க வருகிறாய் என்றும், இது என் மனைவியின் வீடு என்று கூறினார், ஒழுங்கா இங்கிருந்து போய்விடு இல்லையென்றால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார், அப்போது அவரது அண்ணன் கணேசன், மற்றும் திரவியம், சுப்பிரமணி, வினோத் ஆகியோர்கள் எதிரியுடன் இருந்தார்கள். இதுசம்மந்தமாக அசா1 கண்ணப்பன் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இதுசம்மந்தமாக போலீசார் விசாரித்தனர் நான் நடந்த விவரத்தை சொன்னேன்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.